மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தஞ்சை விவசாயப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அங்கே புதியதாக சில சர்க்கரை ஆலைகளை நிறுவலாம் என்று அரசு திட்டமிட்டிருக்கிறது. அதற்கான அனுமதியைப் பெற மத்திய அரசுக்கு மனு அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசு இன்னும் சர்க்கரைக் கொள்கையை வகுக்காத காரணத்தாலே சர்க்கரை ஆலைகள் நிறுவப்படுமா என்பதைப் பற்றி இந்த அரசு தெரிவிக்க இயலாத நிலையில் இருக்கிறது.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : தஞ்சை மாவட்டம் விவசாயப் பகுதி. விவசாய விளைபொருள்களைக் கொண்டு தான் அங்கே புதிய தொழிற்சாலையை ஆரம்பிக்கச் சொல்கிறேன். நான் சொல்லுகிற காகிதத் தொழிற்சாலை விவசாய விளைபொருள் களைக் கொண்டு தான் ஆரம்பிக்கப்பட வேண்டும். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் தொழிற்சாலைகளைப் பற்றிய ஒரு கருத்தரங்கை நடத்தி, தஞ்சைப் பகுதியிலே எப்படி பல தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்ற விவரங்களைப் பரிந் துரை செய்து அரசுக்கு அனுப்பியுள்ளதாக அறிகிறேன். இது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? தஞ்சை மாவட்டம் விவசாயப் பகுதியாக இருந்தாலும், அங்கே தொழிலை ஓரளவிற்காவது தொடங்கு கின்ற அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே கருத்தரங்கு நடைபெற்றது. அங்கு அனுப்பப்பட்டிருக்கின்ற பகுதிகள் அரசினுடைய ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காகிதத் தொழிற்சாலைக்கு தஞ்சை ஆலையிலே இருக்கின்ற கரும்புச் சக்கை புகளூரில் இருக்கின்ற ஆலைக்கு எடுத்துச் செல்லப் படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவாடானை ஒன்றியம் பாண்டுகுடி, ஓரியூர் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்

99—(*வினா எண் 7799 திரு. கா. சொர்ணலிங்கம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடானை ஒன்றியத்தில் உள்ள பாண்டுகுடி, ஓரி யூர் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன ?

(இ) எத்தனை கிராமங்கள் பயன்பெறும் ?

1986 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 115.60 இலட்சங்கள்.

(இ) பாண்டுகுடி மற்றும் ஓரிக்கோட்டை கிராமங்களும் மேலும் 43 குடியிருப்புகளும் இதனால் பயன் பெறும்.

திரு. கா. சொர்ணலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக திருவாடானை ஊராட்சி ஒன்றியம் மிகவும் வறட்சிப் பகுதியாகக் காணப்படுகிறது. அந்தப் பகுதியில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத காரணத்தினால் நோய்கள் வரக்கூடிய ஒரு தன்மை ஏற்பட்டிருக்கிறது. வெய்யில் காலத்திலே காலரா போன்ற நோய்களும், இப்போது கடுமையான காய்ச்சலும், கண் வலியும் ஏற்பட்டு அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு முக்கியமான காரணமாக தண்ணீர்ப் பற்றாக்குறையும் கண்மாய்களிலே மிகக் குறைந்த கொழ கொழ என்று இருக்கின்ற தண்ணீரைக் குடிக்கின்ற காரணத்தினாலும் அந்த வியாதிகள் ஏற்படுகின்றன என்று கூறப்படுகிறது. எவ்வளவு காலத்தில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டுகுடியில் 30 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க 78.6 இலட்சம் செலவிலும், ஓரிகுடியிலே 13 குடியிருப்புகளுக்கு 37.54 இலட்சம் செலவிலும் திட்டங்கள் குடிநீர் வடிகால் வாரியத்தாலே தயாரிக்கப்பட்டு தற்போது அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது விரைவிலேயே செயல்படும்.

திரு. கா. சொர்ணலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 42 கிராமங்கள் என்று கூறியிருக்கிறார்கள். அதிலே ஐந்துகோட்டை கிராமமும் சேர்ந்திருக்கிறதா என்பது தெரியவில்லை. ஐந்துகோட்டை சேர்க்கப்படாத காரணத்தினால் திருவாடானை ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 15 ஆண்டுகளாக பெரும் தலைவராக இருந்த அவருடைய ஊரிலே, தண்ணீர் கொடுப்பதற்கு லாரி போய்கூட, அந்த ஊருக்கு தண்ணீர் கொடுக்கப்படாத காரணத்தினால், அங்கேயுள்ள ஏ. டி. எம். இராமநாத தேவர் அவர்கள் கலெக்டர் அவர்களுக்குத் தந்தி கொடுத்து வரச்சொல்லியும், தண்ணீர் வசதிக்கு பைப் லைன் இன்னும் போடப்படாத காரணத்தினால் மீண்டும் அந்தப் பகுதிக்கு தண்ணீர் கொடுப்பதற்கு வசதிகள் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு கீழேயுள்ள ஊர்களுக்கு

ஐந்துகோட்டையில் இரண்டு குடியிருப்புக்கும் மேலவாயில், பெட்டகோட்டை, பெரியாஞ்சிகுடி மறவர் குடியிருப்பு, ஹரிஜன் குடியிருப்பு, சுப்பிரமணியபுரம், அழகுமடை, மாந்தூர், ஆதியூர், உடையூர் குடியிருப்பு, படப்பை போன்ற குடியிருப்புகளுக்கெல்லாம் தண்ணீர் வழங்குவதற்கு, தாங்கள் அறிவித்துள்ள பெயர்களிலே, இந்த குடியிருப்புகளும் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டுகுடி வட்டாரத்தில் மட்டும் 30மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் 107 பொதுக் குழாய்களும் நிறுவப்பட இருக்கின்றன. ஓரிக்குடி பகுதியில் 13 குடியிருப்புகளுக்கு 16 மீட்டர் உயரத்திற்கு குழாய்கள் போடப்பட இருக்கின்றன. அதிலே 14 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் 48 பொதுக் குழாய்களும் நிறுவப்பட உள்ளன. அதிலே இந்த ஊர்களும் அடங்கும் என்று நான் நம்புகிறேன்.

தம்பிக்கோட்டையில் உப்பு உற்பத்தி.

100—(*வினா எண் 7836) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, தம்பிக்கோட்டையில் உள்ள உப்பு உற்பத்தித் தொழில் நசிந்துவருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அவ்வப்போது ஏற்பட்ட மழை மற்றும் பெரு வெள்ளத்தினால் உப்புத் தொழிற்சாலை பாதிக்கப்பட்டது.

(ஆ) வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு ஒதுக்கிய ரூ. 4 இலட்சத்தில் இத்தொழிற்சாலையில் பாதிக்கப்பட்ட சுற்றுக்கரைகள் மற்றும் உப்புப் பாத்திகள் சீரமைக்கப்பட்டு தற்பொழுது உப்பு உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-20)

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள தம்பிக்கோட்டையில் உள்ள உப்பு உற்பத்தி தொழிற்சாலை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால்துவக்கி வைக்கப்பட்ட திட்டமாகும். அங்கு ஏறத்தாழ இரண்டாயிரம்